# பெண்ணுரிமைகள் கண்ணோட்டம்

## பெண்கள் செய்தி மடல்

தை – ஆனி 2009

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல்: 12:1 ♀♀♀ 2010


பெண்களுக்கெதிரான வன்முறைகளின் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தியுள்ள இப் பெண்ணுரிமைகள் கண்ணோட்டத்தின் நோக்கமானது பெண்களுக்கெதிரான வன்முறைகளை எண்ணிக்கைப்படுத்தலுடனோ அல்லது வன்முறையாளரை கேள்விக்குட்படுத்துவதுடனோ மட்டும் நின்றுவிடுவது அல்ல. இங்கு பெண்கள் பாதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை நோக்குகையில் பெண்களுக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் பணியாற்றும் பொறுப்புவாய்ந்த அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் மேலும் சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ளது அவசியமாகும். ஏனெனில் பொறுப்பு வாய்ந்த பக்கங்களில் உள்ள ஓட்டைகளும் பலவீனங்களும் வன்முறையாளர்களுக்கு மேலும் வன்முறை புரிவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதை பல சம்பவங்களில் இருந்து அறியலாம்.

☞ பாதிக்கப்பட்ட பெண்கள் வன்முறையாளர்களால் வீட்டில் இருந்து வெளியேற்றப்படல்.

ஆபத்தான சந்தர்ப்பங்களில் மீண்டும் வன்முறையாளருடன் பெண்கள் சேர்த்து வைக்கப்படல்.


வன்முறையாளர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பெண்களை பதிவுத் திருமணம் செய்தல்.

சிறுமிகளுக்கு திருமணப் பதிவுகள் வைத்தல்.

பாதிக்கப்பட்டவர் தனக்கான தீர்ப்பை தனது மொழியில் விளங்கிக் கொள்ள முடியாதிருத்தல்.

அனர்த்தங்களின் போது பெண்கள் தங்கள் சொத்துக்களில் உள்ள உரிமைகளை இழத்தல்.

இவ்வாறான சந்தர்ப்பங்களால் பெண்கள் மேலும் பாதிக்கப்படுவதுடன் தங்களுக்கான நியாயங்களை நிலை நிறுத்த முடியாதுள்ளார்கள். ஆகவே பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக பணிபுரியும் தரப்பினர் தங்கள் பார்வைகளை சகல பக்கங்களிலும் ஆழப்படுத்த வெளிவரும் இப் பெண் உரிமைகள் கண்ணோட்டம் உதவியாய் அமைய வேண்டும்.






### தை – ஆனி – 2009

பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் – 79

வெளி நபர்களால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 05.01.2009 | 24 | கொக்கட்டிச் சோலை | வீடு | கணவர் | இடம் பெயர்ந்து செல்கையில் தன்னையும் பிள்ளையையும் தன் கணவன் கைவிட்டுச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், தனக்கும் பிள்ளைக்கும் தாவரிப்பைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 05.01.2009 | 25 | மண்டூர் | வீடு | கணவர் | பிள்ளை பிறந்து மூன்று மாதத்தில் தன்னையும் பிள்ளையையும் கைவிட்டுச் சென்ற கணவன் மீண்டும் திரும்பி வராததுடன் தங்களுக்கான வாழ்க்கைச் செலவும் தருவதில்லை. கணவனைத் தேடி கணவனது வீட்டிற்குச் சென்றால் அங்கு கணவர் வருவதை நிறுத்துவதாகவும் தாம் அங்கிருந்து திரும்பினால் வழமைபோல் அவ்வீட்டிற்கு வருவதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், 5 வயது பிள்ளை யுடன் மிகவும் சிரமப்படும் தனக்கு கணவனி டமிருந்து தாவரிப்பைப் பெற்றுக்கொள்ள உதவுமாறு கோருகிறார். |
| 06.01.2009 | 16 | வாழைச்சேனை | வீடு | காதலன் | குற்றம் சாட்டப்படும் இந் நபர் முன்னர் ஆயுதக் குழுவில் இருந்ததாகவும் திருமணம் முடிக்க விரும்புவதாகக் கூறி தன்னை கர்ப்பிணியாக்கியதுடன் தனது வாழ்விடத்தை விட்டு வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று தனக்கு திருமணப்பதிவு வைத்ததாகவும் சொந்த வாழ்விடத்திற்குத் தன்னை மீள அழைத்து வருகையில் முன்னர் இருந்த ஆயுதக் குழுவினரால் கைது செய்யப் பட்டதாகவும் தனது முயற்சியினால் விடுதலை செய்யப்பட்ட பின் இந் நபர் தன்னிடம் வருவதில்லை என முறைப்பாடு செய்யும் இச் சிறுமி தனக்கு நீதியைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 07.01.2009 | 51 | பெரிய உப்போடை | வீடு | நிறுவனம் | இப் பெண் சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ளார். வீடுகளுக்கு நட்டஈடுகள் கொடுக்கப்பட்டபோது பெண்ணினது பெயரும் ஒருநிறுவனத்தால் பதியப்பட்டதுடன் வீடு கட்டும் பணத்தினை வங்கியில் இருந்து எடுத்து வீட்டைக் கட்டும்படி அந் நிறுவனத்தால் இவருக்கு கூறப்பட்டுள்ளது. எனினும் அவர்களுக்கான பணம் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளதாக வங்கியால் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது குறிப்பிட்ட நிறுவனம் தங்கள் வேலைக் காலம் முடிந்து சென்று விட்டனர். பெண் தங்களுக்கு வீட்டுக்காக அனுமதிக்கப்பட்ட பணத்தினை தாங்கள் பெற்றுக்கொள்ள உதவுமாறு கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 07.01.2009 | 30 | வாழைச்சேனை | வீடு | கணவர் | திருமணம் முடித்தநாளில் இருந்து இப் பெண் கணவனால் பல சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார். வெளிநபர்களை தன்னுடன் தொடர்புபடுத்தி அடிப்பதுடன் கர்ப்பிணியாக இருக்கும் போது தன்னை வெட்டுவதற்காக கத்தியை தேடுகையில் கணவனிடமிருந்து தப்பிப்பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார். அறுவைச் சிகிச்சை மூலம் இரட்டைக் குழந்தைகளை இப்பெண் பெற்றுள்ளார். இதன்பின் தான் திருந்திவிட்டதாகக் கூறி பெண்ணுடன் சேர்ந்த இப்பெண்ணின் கணவர் மீண்டும் அடிக்கத் தொடங்கியுள்ளார். தற்போது இப் பெண் சத்திர சிகிச்சை மூலம் மூன்றாவது குழந்தை ஒன்றைப் பெற்றுள்ளார். தற்போது மேலும் அதிக துன்பத்தை கணவனால் எதிர் கொள்வதாக பெண் குறிப்பிடுகிறார். பிள்ளைகளை படிக்க அனுமதிப்பதில்லை, வயிற்றின் காயம் பூரணமாக குணமாகாத நிலையில் பெரிய குழந்தைகளை காலில் வைத்து ஆட்டித் தூங்க வைக்கும்படி அடிப்பது, குழந்தைகளை அடிப்பது, இவ்வாறு கணவனால் மிகவும் சித்திரவதைப் படுவதால் தனக்கு பாதுகாப்பையும் தாவரிப்பையும் பெற்றுக் கொள்ள உதவி செய்வதுடன் சீதனப்பணம், தனது நகைகள், ஆகியவற்றையும் பெற்றுக் கொள்ள உதவ வேண்டும் எனப் பெண் கோருகிறார். |
| 09.01.2009 | 39 | குருக்கள்மடம் | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் பெண்ணையும் இரு பிள்ளைகளையும் கவனிக்காதபடியால் பெண்ணால் வழக்குத் தொடரப்பட்டு கணவனிடமிருந்து இப் பெண் தாவரிப்புப் பெற்று வந்துள்ளார். தாவரிப்பாக கணவன் கட்டும் பணம் பிள்ளைகளை வளர்க்கப் போதாமல் இருந்ததனால் தான் வெளிநாட்டிற்குப் பணிப்பெண்ணாகச் சென்றதாகவும் அக்காலத்தில் கணவன் தாவரிப்புக் கட்டுவதை நிறுத்திவிட்டதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், நாடு திரும்பிய தனக்கு எந்தவித வருமானமுமின்றி இருப்பதால் மீளவும் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 13.01.2009 | 18 | சுவிஸ்கிராமம் | வீடு | கணவனின் வீட்டார் | இப் பெண்ணும் அவரது காதலனும் அவர்களது வீட்டாரின் சம்மதமின்றி திருமணம் முடித்துள்ளனர். திருமணத்தின் பின் கணவனின் தந்தை நஞ்சருந்தியுள்ளதாக பொய் சொல்லி தனது கணவனை அழைத்துச் சென்ற கணவனின் வீட்டார் கணவனை அடைத்து வைத்துள்ளதாக முறைப்பாடு செய்துள்ள இப் பெண், தனது கணவனை மீட்டுத்தரும்படி கோருகிறார். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 21.01.2009 | | ஆரையம்பதி | வைத்தியசாலை | வெளிநபர் | பிரசவத்திற்காக வைத்தியசாலைக்கு இப் பெண் சென்றுள்ளார். உறவினர்கள் பிரசவ நேரத்தில் அருகில் இல்லாத காரணத்தால் தான் அணிந்திருந்த நகைகளை அந் நேரத்தில் கடமையில் இருந்த வைத்தியசாலை ஊழியரிடம் கொடுத்ததாகவும் பிரசவம் முடிந்த பின்னர் நகைகளை ஊழியரிடம் கேட்டபோது தனது கூடையில் நகைகளை வைத்ததாக ஊழியர் கூறியதாகவும் ஆனால் தனது கூடைக்குப் பதிலாக வேறு நபரின் கூடையிருந்ததாகவும் தனது நகைகள் அக் கூடையில் இருக்கவில்லை எனவும் குறிப்பிடும் இப் பெண் தனது நகைகளைப் பெற்றுக் கொள்ள உதவுமாறு கோருகிறார். |
| 22.01.2009 | 39 | இருதயபுரம் | வீடு | கணவர் | திருமணம் முடித்த காலத்தில் இருந்து தன்னையும் பிள்ளைகளையும் கணவர் ஒழுங்காக பராமரிப்புச் செய்யாததுடன் தனக்கும் பிள்ளைகளுக்கும் அடிப்பது, உணவு உண்ண முடியாமல் சாப்பாட்டிற்குள் தண்ணீர் ஊற்றுவது போன்ற பல துன்பங்களை தன் கணவன் செய்து வருவதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், பிள்ளைகளை ஒழுங்காக படிப்பித்து வளர்ப்பதற்காக கணவனைப் பிரிந்து வாழ விரும்புவதாகவும் பிள்ளைகளை வளர்ப்பதற்குரிய தாவரிப்பினை கணவனிடமிருந்து பெற்றுக் கொள்ள உதவி செய்யும்படியும் கோருகின்றார். |
| 27.01.2009 | 31 | கொக்கட்டிச் சோலை | வீடு | கணவர் | "அக்கா திருமணம் முடித்த பின்னரே திரும்பி வருவேன்" எனத் தன்னைத் திருமணம் முடித்து 15 ஆவது நாளில் பிரிந்து சென்ற தனது கணவர் 2 வருடமாகியும் தன்னிடம் வரவில்லை தனக்கான வாழ்க்கைச் செலவும் தரவில்லை என முறைப்பாடு செய்யும் இப் பெண், தான் மிகவும் சிரமப்படுவதாகவும் தனது கணவன் தன்னுடன் சேர்ந்து வாழ உதவி செய்யும்படியும் கோருகிறார். |
| 02.02.2009 | 28 | கோயில் போரதீவு | வீடு | கணவர் | குடிப்பழக்கத்திற்கு உள்ளாகியுள்ள தன் கணவன் பிள்ளைகளுக்கும் தனக்கும் அடித்து வருவதுடன் அவரது பல நண்பர்களை அழைத்து வந்து சாப்பாடு போடும்படி வற்புறுத்துவதாகவும் ஆனால் வீட்டுச் செலவுக்கு பணம் கொடுப்பதில்லை எனவும் முறைப்பாடு செய்யும் இப் பெண், தாம் நிம்மதியாக வாழ கணவனை விட்டுப் பிரிய விரும்புவதாகவும் ஆகவே தாவரிப்புப் பெற்றுக் கொள்ள உதவி புரியும்படியும் கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 02.02.2009 | 60 | நாவற்கேணி | வெளிநாடு | முகவர் | இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீட்டுப் பணிப் பெண்ணாக வெளிநாடு சென்ற இப் பெண்ணின் மகள் இன்னும் தன்னுடன் தொடர்பு கொள்ள முடியாமல் உள்ளார் என முறைப்பாடு செய்யும் இத்தாய், மகளுடன் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 10.02.2009 | 49 | மட்டக்களப்பு | வீடு | வெளிநபர் | கணவனை இழந்த இப் பெண் வீடு இல்லாத காரணத்தால் வேறு ஒருவரின் வீட்டில் முறையே 25,24,20 வயதுப் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். வீட்டு உரிமையாளர் வாடகைப் பணத்திற்குப் பதிலாக சமைத்து சாப்பாடு தரும்படி கேட்டதாகவும் அவ்வாறான உடன்படிக்கையில் தான் குடியிருந்ததாகவும் கூறும் இப் பெண், தற்போது வீட்டு உரிமையாளர் தன்னை வெளியில் செல்ல அனுமதிக்காததுடன் உரிமையாளரின் நடவடிக்கைகள் அவரைத் திருமணம் செய்ய தன்னை நிர்ப்பந்திப்பது போல் அமைந்து ள்ளதாக முறைப்பாடு செய்கின்றார். ஆகவே வீடு இல்லாத தனக்கு பாதுகாப்புடன் அவ் வீட்டில் இருப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி பெண் கோருகிறார். |
| 12.02.2009 | 19 | கல்லடி | வீடு | கணவன் | மூதூரில் இருந்து இடம்பெயர்ந்து வந்த குற்றம் சாட்டப்பட்டவர் தனக்குத் திருமணமாகவில்லை எனக் கூறி இப் பெண்ணைத் திருமணம் முடித்துள்ளார். திருமணம் முடித்து ஒரு மாதத்தின் பின் இரண்டு பிள்ளைகளுடன் வந்த ஒரு பெண் இந் நபரை தன் கணவன் எனச் சொல்லி அழைத்துச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 12.02.2009 | 42 | கொம்மாதுறை | வீடு | கணவன் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவன் இப் பெண்ணையும் 5 பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்று வேறு திருமணம் முடித்துள்ளார். பெண் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிசார் கணவனையும் பெண்ணையும் சேர்த்து வைத்துள்ளனர். எனினும் மீண்டும் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து மற்றைய மனைவியுடன் வாழ்வதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், தனக்கும் பிள்ளைகளுக்கும் கணவனிடமிருந்து தாவரிப்பைப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 16.02.2009 | 29 | வீச்சுக்கல்முனை | வீடு | கணவன் | தனது கணவன் ஆமியில் உள்ளார். கணவனுக்கு தன்மீது சந்தேகம் உள்ளது. இதனால் வீட்டிற்கு வரும் போதெல்லாம் அடிக்கிறார். கணவன் வீட்டிற்கு வரும்போது கணவருடன் சேர்ந்து பொலிசாரும் வருகின்றனர். ஆகவே பொலிசிலும் முறைப்பாடு செய்யமுடியவில்லை. இவ்வாறு முறைப்பாடு செய்யும் பெண், தனக்கும் தனது 4 பிள்ளைகளுக்கும் கணவனிடமிருந்து வாழ்க்கைச் செலவைப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 17.02.2009 | 22 | சந்திவெளி | வீடு | கணவர் | பெண் திருமணம் முடித்து 3 வருடங்கள். கடந்த ஒன்றரை வருடங்களாக பெண்ணின் கணவன் பெண்ணைப் பிரிந்து சென்று விட்டார். ஆகவே விவாகரத்துப் பெற்றுத்தரும்படி பெண் கோருகிறார். |
| 18.02.2009 | 18 | வந்தாறுமூலை | வீடு | கணவர் | குற்றஞ்சாட்டப்பட்ட இந் நபர் இப் பெண்ணைக் காதலித்துள்ளார். காதலித்தபின் இப் பெண்ணுடன் இரண்டு மாதகாலமாக தொடர்பு கொள்ளாமல் விட்டதனால் அரசியல் குழு ஒன்றினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இவர்கள் திருமணம் நடந்துள்ளது. எனினும் தற்போது இப் பெண்ணை இவர் கைவிட்டுள்ளதால் பெண் விவாகரத்துக் கோருகிறார். |
| 18.02.2009 | 29 | புதுக்குடியிருப்பு | வீடு | வெளிநபர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள இந் நபர் இப் பெண்ணின் குடும்பத்தினரின் பராமரிப்பில் வளர்ந்துள்ளார். இந் நபர் ஆயுதத்தைக்காட்டி தனது வீட்டாரை அச்சுறுத்தி தன்னைக் கடத்தி பாலியல் பலாத்காரம் புரிந்ததாக முறைப்பாடு செய்யும் இப் பெண், தற்போது கர்ப்பிணியாகவுள்ளார். ஆகவே தனது எதிர்கால வாழ்க்கைக்கு உதவுமாறு பெண் கோருகிறார். |
| 24.02.2009 | 22 | சித்தாண்டி | பல்கலைக்கழகம் | | பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த இப் பெண் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். இவரது மரணம் கொலை என கடிதம் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 24.02.2009 | 25 | ஆரையம்பதி | வீடு | தந்தை | தந்தையின் பெயரில் உள்ள காணியில் ஒரு பகுதியை தனக்குத் தருவதாகச் சொன்ன தந்தை தற்போது காணி வழங்க மறுப்பதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், கணவன் அக் காணியைப் பெற்று வரும்படி பிரச்சனைப் படுத்துவதால் தந்தையிடமிருந்து காணியைப் பெற்றுக்கொள்ள உதவும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 29.02.2009 | 48 | ஜெயந்திபுரம் | வீடு | கணவர் | தனது கணவர் இரண்டாவது திருமணம் முடித்துள்ளதாகவும் தற்போது 2வது மனைவி கர்ப்பிணியான நிலையில் தன்னைக் கணவர் வீட்டை விட்டுத் துரத்தி விட்டதாகவும் வீடு கணவர் பெயரில் உள்ளதால் தான் நிர்க்க தியான நிலையில் உள்ளதாக முறைப்பாடு செய்யும் இப் பெண் தனக்கு வீட்டில் இருப்பதற்குரிய ஒழுங்கும் கணவனிடமிருந்து தாவரிப்பும் பெற்றுத் தரும்படி கோருகின்றார். |
| 03.03.2009 | 37 | புன்னச்சோலை | வீடு | கணவன் | திருமணம் முடித்து மூன்று மாதக் கர்ப்பிணியாக இருக்கும் போது குற்றம் சாட்டப்பட்டுள்ள தன் கணவன் தன்னைக் கைவிட்டுச் சென்றுள்ள தாகவும் இதனால் தற்போது பிள்ளைக்கான பிறப்புப் பதிவு வைக்கமுடியாமல் உள்ளதா கவும் முறைப்பாடு செய்யும் இப் பெண், பிள்ளைக்குப் பிறப்புப் பதிவு வைப்பதற்கு உதவும்படி கோருவதுடன் கணவருடன் தன்னைச் சேர்த்து வைக்க வேண்டாம் எனவும் குறிப்பிடுகின்றார். |
| 03.03.2009 | 49 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | வேறு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ள தன் கணவன் குடித்துவிட்டுத் தன்னை அடிப்பதுடன் படிக்கவிடாமல் பிள்ளைகளை தொல்லைப்படுத்துவதாக முறைப்பாடு செய்யும் பெண், தனது நான்கு பிள்ளைகளை வளர்ப்ப தற்காக கணவனிடமிருந்து தாவரிப்புக் கோருகிறார். |
| 03.03.2009 | 30 | தேத்தாத்தீவு | வீடு | கணவன் | பெண்ணின் கணவர் 5 மாதக் கர்ப்பிணியாய் உள்ள பெண்ணைக் கைவிட்டு வேறு பெண்ணுடன் சென்று விட்டார். பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 04.03.2009 | 18 | கல்லடி | வீடு | சிறுவன் | குற்றம் சாட்டப்பட்டவர் சட்டப்படி திருமணப் பதிவு வைப்பதற்குரிய வயதை அடையாத காரணத்தால் திருமணப்பதிவின்றி பெண்ணுடன் வாழ்ந்து வந்துள்ளார். தற்போது பெண்ணிற்குச் சீதனமாக காணி தரவேண்டும் எனத் தன் கணவனை கணவனின் வீட்டார் அழைத்துச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், தனது கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 04.03.2009 | 53 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | கணவர், மனைவியுடனும் பிள்ளைகளுடனும் சண்டை பிடித்து வீட்டை விட்டு வெளியேறி வாழ்ந்து வருகிறார். தங்களை விட்டுப் பிரிந்த கணவன் ஒரு இலட்சம் காசு கேட்டு தங்க ளுடன் சண்டை பிடித்து வருவதால் பிள்ளைக ளுக்கு படிக்க முடியாமல் உள்ளதாகப் பெண் முறைப்பாடு செய்கின்றார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 05.03.2009 | 60 | பூம்புகார் | வீடு | கணவர் | இப் பெண் 40 வருடங்களாக வைத்தியர் வீட்டில் பணிப்பெண்ணாய் இருந்துள்ளார். பிற்காலத்தில் தான் வசிப்பதற்கு காணித் துண்டு ஒன்று தந்துதவுவதாகக் கூறிய வைத்தியர் தற்போது எதுவும் தராமல் ஏமாற்றியுள்ளதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், தான் வைத்தியரிடமிருந்து காணித்துண்டு பெற்றுக் கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |
| 09.03.2009 | 26 | மட்டிக்களி | வீடு | கணவன் | தன் கணவன் பிள்ளைகளுக்கும் தனக்கும் வாழ்க்கைச் செலவுக்கு பணம் கொடுக்காமல் தன் மீது சந்தேகம் கொண்டு தன்னை அடித்துத் துன்பப்படுத்துவதுடன் வேலைக்குச் செல்கையில் தன்னை வீட்டிற்குள் வைத்துப் பூட்டிச் செல்வதாக முறைப்பாடு செய்யும் இப் பெண், சேர்ந்து வாழ முடியாத கணவனுடன் தாய் சேர்ந்து வாழச் சொல்வதால் பிள்ளை களை வளர்க்கப் பணிப் பெண்ணாக வெளி நாடு செல்லப் போவதாகக் கூறுகிறார். |
| 12.03.2009 | 32 | திமிலைதீவு | வீடு | கணவன் | குடித்துவிட்டு அடித்து சித்திரவதைப்படுத்தும் தன் கணவன் நண்பர்களை அழைத்து வந்து சாப்பாடு சமைத்துக் கொடுக்கும்படி வற்புறுத்து வதாகவும் பின் அவர்களுடன் தன்னை இணைத்துச் சந்தேகப்பட்டு அடிப்பதாகவும் முறைப் பாடு செய்யும் இப் பெண், கணவனுடன் சேர்ந்து வாழ முடியாமல் உள்ளதால் பிரிந்து வாழ விரும்பும் தனக்கு கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுக் கொள்ள உதவும்படி கோருகிறார். |
| 23.03.2009 | 32 | சித்தாண்டி | வீடு | கணவன் | குடிப்பழக்கம் உள்ள பெண்ணின் கணவர் இப் பெண்ணை அடித்து சித்திரவதைப்படுத்துவதுடன் பெண்ணின் நகைகளை ஈடு வைத்துள்ளார். பெண்ணைக் கொலை செய்வதாக அச்சுறுத்தி பெண்ணுக்கு நஞ்சு பருக்கியுள்ளார். ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவருக்கெதிரான வழக்கு ஒன்று உள்ள நிலையில் தற்பொழுது பிள்ளையின் கழுத்தையும் கணவர் நெரித்து ள்ளதாக பெண் முறைப்பாடு செய்வதுடன் தன் கணவர் திருந்தினால் கணவருடன் சேர்ந்து வாழ விரும்புவதாக மனைவி குறிப்பிடுகிறார். |
| 23.03.2009 | 20 | மண்டூர் | வீடு | தந்தை | தனது தந்தை, தன்னைப் பிற ஆண்களுடன் இணைத்தும் தூசன வார்த்தைகளால் கதைத்தும் துன்புறுத்துவதுடன் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் தனக்கு படிப்பிற்கு உதவாமல் வீட்டை விட்டு வெளியேறும்படி பலமாக அடி த்துக் கொடுமைப்படுத்துவதால் தான் உடல் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யும் இம் மாணவி, தனது படிப்பை ஒழுங்காக மேற்கொள்ளவும் தந்தையி டமிருந்து பாதுகாப்புப் பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 23.03.2009 | 34 | திராய்மடு | வீடு | கணவன் | பெண்ணின் கணவர் பெண்ணையும் பிள்ளைகளையும் அடிக்கடி கைவிட்டுச் செல்வதும் பெண் பொலிசில் முறைப்பாடு செய்யும்போது சேர்வதும் சிறிது காலத்தின் பின் மீண்டும் பிரிவதுமாக உள்ளார். பொலிசார் பிரச்சினையைத் தீர்க்காமல் சேர்த்து வைத்தபடி உள்ளார்கள், எனினும் கணவன் பிள்ளைகளை வளர்ப்பதிலோ வீட்டின் செலவுகளிலோ பொறுப்பற்றவராய் உள்ளார் என முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தாவரிப்புக் கோருகிறார். |
| 23.03.2009 | 25 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | திருமணம் முடித்ததில் இருந்து குற்றம் சாட்டப்பட்ட தன் கணவன் தன்மேல் சந்தேகம் கொண்டு அடிப்பதுடன், வெளியில் அழைத்துச் செல்வதில்லை, ஒட்டுப் பொட்டு வைக்க விடுவதில்லை, தலையை உச்சியெடுத்து இழுக்க விடுவதில்லை, பெண்கள் உட்பட ஒருவருடனும் கதைக்க அனுமதிப்பதில்லை போன்ற சித்திரைவதைகளைச் செய்து வருகிறார் என முறைப்பாடு செய்யும் பெண், இதனால் தன்னை மாமா(கணவனின் தந்தை) தன் தாயின் வீட்டில் கொண்டு போய் விட்டுள்ளதாகவும். கணவர் திருந்தினால் சிறிது காலத்தின் பின் அவருடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் குறிப்பிடுகிறார். |
| 27.03.2009 | 40 | பெரிய உப்போடை | வீடு | கணவர் | குடிப்பழக்கத்திற்கு உள்ளாகியுள்ள கணவன், தனக்கும் பிள்ளைகளுக்கும் அடித்து வருவதுடன் வீட்டுச் செலவுக்கு பணம் கொடுப்பதில்லை என இப்பெண் முறைப்பாடு செய்கிறார். ஆகவே பிள்ளைகளை ஒழுங்காகப் படிப்பித்து நிம்மதியாக வாழ கணவனை எச்சரித்து சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 30.03.2009 | 26 | இருதயபுரம் | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டவர் மூன்று பெண்களை ஏமாற்றித் திருமணம் முடித்துள்ளார். முதல் மனைவிக்கு பிள்ளை பிறக்காமல் மருந்து கொடுத்ததாகவும் அதே போன்று இரண்டாம் மனைவிக்கும் பிள்ளை பிறக்காமல் மருந்து கொடுத்ததாகவும் எனினும் அவருக்கு பிள்ளை பிறந்துள்ளதாகவும் அதன் பின் வெளிநாடு சென்ற தங்கள் கணவன் வேறொரு பெண்ணைக் கூட்டி வந்துள்ளதுடன் தாங்கள் பொலிஸ் நிலையத்திற்கு தனக்கெதிராக முறைப்பாடு செய்யச் சென்றால் சீதனம் கொடுக்காமல் திருமணம் முடித்துள்ளார்கள் என பொலிசார் தங்களை அடைப்பார்கள் எனக் கணவன் பயமுறுத்துவதாக முறைப்பாடு செய்யும் முதல் மனைவியரான இரு பெண்களும் தங்களுக்கான தாவரிப்புக்களை கணவனிடமிருந்து பெற்றுத் தரும்படி கோருகின்றனர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 31.03.2009 | 21 | மாவடிவேம்பு | வீடு | கணவன் | பெண்ணின் கணவர் வீட்டுச் செலவுகளைக் கவனிக்காததுடன் பெண்ணையும் பிள்ளைகளையும் அடிக்கடி கைவிட்டு அவர் பிறந்த வீட்டிற்குச் சென்று தங்கிவிடுகிறார். பெண் பல தடவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணையின் போது தான் இனி அவ்வாறு நடந்து கொள்ள மாட்டேன் என சொல்லி வருவதுடன் மீண்டும் மீண்டும் தங்களைப் பிரிந்து சென்றுவிடுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகின்றார். |
| 07.04.2009 | 25 | திக்கோடை | வீடு | கணவன் | இப் பெண்ணைக் குற்றம் சாட்டப்பட்டவர் இரண்டாம் தாரமாக முடித்துள்ளார். பெண் கணவனிடத்தில் இருந்து பிரிந்து மேலும் படிக்க விரும்புகிறார். தன்னை விருப்பமின்றி வீட்டார் திருமணம் முடித்துக் கொடுத்ததாகவும் கணவன் தன்னுடன் கதைப்பதில்லை, வீட்டிற்கு வருவதும் குறைவு என முறைப்பாடு செய்யும் பெண் விவாகரத்துக் கோருகின்றார். |
| 07.04.2009 | 21 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | திருமணம் முடித்து ஒரு வருடத்தில் பெண்ணை குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவன் பிரிந்து சென்றுள்ளார். பெண் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்து கணவனிடமிருந்து தாவரிப்புப் பணம் பெற்று வந்துள்ளார். எனினும் தற்போது தானும் கணவனும் பிரிந்து விட்டதாக நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளதாகவும் இது தனக்குத் தெரியாமல் நடந்த திட்டமிட்ட வேலை என முறைப்பாடு செய்யும் பெண், கணவனுடன் சேர்ந்து வாழ நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோருகிறார். |
| 07.04.2009 | 45 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்ட கணவர் பெண்ணுடன் சண்டை பிடித்து அடித்து, உதைத்து வருகிறார். இதனால் பெண் பொலிசாரிடமும் அரசியல் குழுக்களிடமும் முறைப்பாடுகள் செய்து வந்துள்ளார். விசாரணைகளின் போது தான் பிரச்சினைப்படுத்த மாட்டேன் எனக் கூறி விட்டு பின்னர் மீண்டும் பிரச்சினைப்படுத்துவதாகவும் இதனால் மகளின் குடும்பத்திலும் பிரச்சனைகள் உருவாகுவதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்று பிள்ளைகளின் வாழ்விற்காய் கணவனைப் பிரிந்து வாழ விரும்புவதாகக் கூறுகிறார். |
| 07.04.2009 | 48 | மாமாங்கம் | வீடு | கணவர் | குடிப்பழக்கத்திற்கு உள்ளாகியுள்ள கணவன், தனக்கும் பிள்ளைகளுக்கும் தூசன வார்த்தைகளால் ஏசி அடித்து வருவதுடன் வீட்டுச் செலவுக்கும் பணம் கொடுப்பதில்லை என முறைப்பாடு செய்யும் இப்பெண், பிள்ளைகளை ஒழுங்காகப் படிப்பித்து நிம்மதியாக வாழ கணவனை விசாரித்து அறிவுரை கூறும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 20.04.2009 | 35 | காக்காச்சி வெட்டை | வீடு | கணவர் | பெண் பணிப்பெண்ணாக வெளிநாடு சென்றுள்ளார். வெளிநாட்டில் வைத்து குற்றம் சாட்டப்பட்டவரைத் திருமணம் முடித்துள்ளார். நாடு திரும்பி கணவனின் ஊரில் சிறிது காலம் தங்கி வாழ்ந்து பின் தனது சொந்த இடத்திற்குத் திரும்பியுள்ளார். தற்போது தனது கணவன் வரமுடியாது என தொலைபேசியூடாக அறிவித்துள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், தானும் பிள்ளையும் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்வதால் கணவனுடன் சேர்த்து வைக்கும்படி அல்லது தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகின்றார். |
| 20.04.2009 | 25 | திராய்மடு | வீடு | கணவர் | காணி உறுதியையும் நகைகளையும் கொண்டு வந்தால்தான் வீட்டில் இருக்க விடுவேன் எனக் கூறி தனது கணவர் தன்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டதுடன் தனது 8 மாதக் குழந்தையையும் பறித்துவிட்டதாக முறைப்பாடு செய்யும் ஆறு மாதக் கர்ப்பிணியான இப் பெண் தனது குழந்தையை கணவனிடமிருந்து பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 21.04.2009 | 45 | சந்திவெளி | வீடு | கணவர் | இப் பெண்ணின் கணவன் பெண்ணையும் மூன்று பிள்ளைகளையும் பிரிந்து தாயின் வீட்டில் வாழ்கிறார். இவருக்கு வேறு பெண்களுடன் தொடர்பு உள்ளதாகவும் இதனால் தன்னை விவாகரத்துச் செய்யும்படி கேட்பதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், தற்போது வாழ்க்கைச் செலவிற்கென கணவன் வழங்கும் பணம் போதாமல் உள்ளதால் பணத்தினை கூட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோருகின்றார். |
| 22.04.2009 | 34 | கிரான்குளம் | வீடு | கணவன் | குற்றம் சாட்டப்பட்ட கணவர் பெண்ணுடனும் மூன்று பிள்ளைகளுடனும் சண்டை பிடித்து அடித்து, உதைத்து, வீட்டைவிட்டுத் துரத்தி வருகிறார். இதனால் பெண் பொலிசாரிடம் முறைப்பாடுகள் செய்துவந்துள்ளார். விசாரணைகளின் போது தான் பிரச்சனைப்படுத்த மாட்டேன் எனக் கூறி பின்னர் மீண்டும் பிரச்சனைப்படுத்துவதாகவும் இதனால் பிள்ளைகளைப் படிப்பிக்க முடியாமல் உள்ளதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், பிள்ளைகளை நிம்மதியாகப் படிப்பிப்பதற்காய் கணவனை வீட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்க உதவி புரியுமாறு கோருகிறார். |
| 22.04.2009 | 22 | ஆரையம்பதி | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டவர் பெண்ணிற்கு பதிவு வைத்து இரண்டாவது மாதத்தில் பெண்ணைப் பிரிந்து சென்றுவிட்டார். இதனையிட்டு பெண் அரசியல் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார். எனினும் அக் குழுவினர் "தான் கணவனுடன் இனி எந்தவிதமான தொடர்பும் கொள்ளப் போவதில்லை" என தனது விருப்பமின்றி தன்னிடமிருந்து கடிதம் பெற்றதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற உதவி கோருகின்றார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 24.04.2009 | 30 | மட்டக்களப்பு | வீடு | மருமகன் | மருமகன் முறையானவர் இப் பெண்ணை அடித்துக் காயப்படுத்தியுள்ளார். இதனால் பெண் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 7 நாட்கள் சிகிச்சை பெற்றுள்ளார். இது தொடர்பாக இப் பெண், பொலிசாரிடமும் மத்தியஸ்தர் குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளார். தனது முறைப்பாட்டிற்கு பொலிசார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையெனவும், மத்தியஸ்தர் குழு, தனக்கு அடித்து ஆடைகளைக் கிழித்தவருடன் சமாதானமாகப் போகும்படி கூறுகிறார்கள் எனவும் முறைப்பாடு செய்யும் பெண், தனக்கு நீதி தேவை எனக் கோருகின்றார். |
| 24.04.2009 | 42 | சின்ன உப்போடை | வீடு | கணவர் | கணவர், பெண்ணுடன் சண்டை பிடித்துவிட்டு மூன்று பிள்ளைகளில் ஆண் பிள்ளையை தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டார். இரு பெண் பிள்ளைகளுடன் வாழும் இப்பெண் தன் மகள்களில் ஒருவர் பூப்பெய்தி விட்டதாகவும் எனினும் சாப்பாடு கொடுக்கவும் வசதியற்றுத் தான் இருப்பதாகவும் கணவர் உதவி செய்வதில்லை எனவும் முறைப்பாடு செய்வதுடன் கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும் படியும் சேர்ந்து வாழ மறுத்தால் கணவரிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத் தரும்படியும் கோருகின்றார். |
| 27.04.2009 | 23 | திராய்மடு | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் திருமணம் முடித்ததில் இருந்து இப் பெண்ணை அடித்து வருகிறார்.பெண் பொலிஸ் நிலையத்தில் பல தடவை முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் போது அடிக்கமாட்டேன் எனக் கூறி வரும் கணவர் வீட்டிற்கு வந்ததும் கதவைப் பூட்டி கம்பியால் அடிப்பதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவருடன் வாழ முடியாது சேர்த்து வைக்க வேண்டாம் எனக் கோருகிறார். |
| 27.04.2009 | 26 | நொச்சிமுனை | வீடு | கணவர் | பெண்ணின் கணவர் குடித்துவிட்டு பெண்ணைத் தினமும் அடித்துச் சித்தரவதைப்படுத்துவதுடன் பிள்ளைகளை தன் பிள்ளைகள் இல்லை எனவும் கூறி வருகிறார். பெண் கணவரை விவாகரத்துச் செய்ய முடிவெடுத்தபோதும் உறவினர்களால் சேர்த்து வைக்கப்பட்டுள்ளார். தன்னைக் கொலை செய்ய கணவர் கத்தியுடன் துரத்தியதால் தற்போது தாயின் வீட்டில் பிள்ளைகளுடன் இருப்பதாகவும் கணவர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற உதவி புரியும்படி கோருகின்றார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 27.04.2009 | 16 | ஏறாவூர் | கடற்கரை | ஊர்நபர் | இச் சிறுமி பாடசாலை முடிந்து வருகையில் அதே ஊரைச் சேர்ந்த நபரால் கடத்தப் பட்டுள்ளார். மாத்திரை கொடுக்கப்பட்டு மயங்கிய நிலையில் கடற்கரையில் சிறுமியைக் கண்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்ததாக முறைப்பாடு செய்யும் பெற்றோர் எதிராளிக்கு தகுந்த தன்டனை பெற உதவிபுரியும்படி கோருகின்றனர். |
| 29.04.2009 | 24 | பெரியகல்லாறு | வீடு | கணவர் | கணவன் வீட்டுப் பொறுப்புக்களைக் கவனிக் காமல் இருப்பதால் தானும் பிள்ளைகளும் வாழ மிகுந்த சிரமப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தாவரிப்புக் கோருகின்றார். |
| 29.04.2009 | 52 | இருதயபுரம் | வீடு | அக்காவின் மகன் | உறுதியின் படி தனது காணி அக்காவின் காணியை விட அளவில் பெரிதாய் உள்ளது என குறிப்பிடும் பெண், அக்கா இறந்த பின் தற்போது அக்காவின் மகன் "காணியைச் சமனாகப் பிரிக்க வேண்டும்" என தன்னுடன் சண்டை பிடித்து அச்சுறுத்துவதாக முறைப்பாடு செய்கின்றார். |
| 30.04.2009 | 20 | ஆரையம்பதி | வீடு | கணவன் | வீதி வேலைக்காக ஆரையம்பதிக்கு வந்த நபர் பெண்ணைத் திருமணம் முடித்துள்ளார். பின் பெண் கர்ப்பிணியான நிலையில் பெண்ணைக் கைவிட்டுத் தன் தாயின் வீட்டிற்குச் சென்று விட்டார். தற்போது தன்னால் கணவனுடன் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனுடன் தன்னைச் சேர்த்து வைக்கும்படி கோருகின்றார். |
| 07.05.2009 | 52 | பாலமீன்மடு | வீடு | கணவர் | கணவன் வீட்டுப் பொறுப்புக்களைக் கவனிக் காமல் இருப்பதால் தானும் பிள்ளையும் வாழ மிகுந்த சிரமப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தனது செலவிற்குப் பண்ம் பெற்றுத்தரும்படி கோருகின்றார். |
| 11.05.2009 | 20 | மண்டூர் | வீடு | கணவர் | பெண்ணைத் திருமணம் முடித்த பின் குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவன் பெண்ணின் பண உதவியுடன் வெளிநாடு சென்றுள்ளார். வெளிநாட்டில் இருக்கும் போது தன்னுடன் தொடர்பு கொள்ளாமல் இருந்ததாகவும் தற்போது நாடு திரும்பிய நிலையில் வீட்டிற்கு வராமல் உள்ளதுடன் ஐந்து இலட்சம் ரூபாய் சீதனம் கேட்பதுடன் சீதனம் கொடுக்காவிட்டால் வரமாட்டேன் எனக் கணவர் கூறுவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 12.05.2009 | 49 | ஆரையம்பதி | வீடு | வெளிநபர் | இப் பெண் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபரிடம் கடன் பெற்றுள்ளார். பெற்ற கடனை கட்டமுடியாமல் இருந்த காரணத்தால் கடன் கொடுத்தவர் பொலிஸ் நிலையத்தில் பெண்ணுக்கெதிராக முறைப்பாடு செய்துள்ளார். இதனால் பெண் காணியை அத்தான் முறையானவருக்கு ஈடு வைத்து கடனையும் வட்டியயும் கட்டியுள்ளார். எனினும் தனது காணி வேறு ஒருவரின் பெயருக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளதுடன் ஏலத்திற்கும் விடப்பட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், தனது காணியை மீட்டெடுக்க உதவிபுரியும்படி கோருகிறார். |
| 13.05.2009 | 25 | நாவற்கேணி | வீடு | கணவன் | திருமணம் முடித்ததில் இருந்து பெண்ணை குற்றம் சாட்டப்பட்ட கணவன் பராமரிப்ப தில்லை. பிள்ளை பிறந்துள்ள நிலையில் பிள்ளைக்கு பிறப்புப் பதிவு வைப்பதானால் பிள்ளையின் பெயரில் சொத்து எழுத வேண்டும் என கணவன் மறுத்து விட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், பிள்ளைக்குப் பதிவு வைக்க உதவும்படி கோருகின்றார். |
| 19.05.2009 | 22 | சத்துருக் கொண்டான் | வீடு | கணவர் | குடும்பப் பொறுப்பற்று நடக்கும் தன் கணவன் தற்போது தன் பெற்றோர் தனக்கு தந்த காணி அளவு போதாது என்று சண்டை பிடித்து வருவ தாக முறைப்பாடு செய்கிறார். ஆகவே பெண் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற உதவி கோருகிறார் |
| 19.05.2009 | 22 | கல்லடி | வீடு | கணவர் | இப் பெண் திருமணம் முடித்து கணவனுடன் கொழும்பில் வசித்து வந்துள்ளார். கணவன் பெண்ணின் நகைகளை விற்றுச் செலவளித்த துடன் பெண்ணின் வீட்டிலிருந்தும் பணம் பெற்று வந்துள்ளார். பெண்ணை மிதித்தல், பெண்ணின் கையை வளைத்தல், முதுகை வளைத்து அடித்தல், தலையில் அடித்தல், தலை முடியைப் பிடித்திழுத்தடித்தல், பெண் ணின் தாய்க்கும் தங்கைக்கும் காறித் துப்புதல், பெண்ணின் உடைகளை பற்றவைத்தல் போன்ற சித்திர வதைகளை கணவனால் அனுபவித்ததாகவும் இதனால் முள்ளந்தண்டு பாதித்து நடக்க முடியாது மட்டக்களப்பு வைத்தியசாலை, கொழும்பு "நவலோகா வைத்தியசாலை" களில் இரண்டு மாதத்திற்கு மேற்பட்ட வைத்திய சிகிச்சை பெற்றதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், கணவனி டமிருந்து விவாகர த்துக் கோருவதுடன் கொழும்பில் உள்ள கணவனின் வீட்டிலிருந்து தனது கல்விச் சான்றிதழ்களையும் பெற்றுத் தரும்படி கோருகிறார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 21.05.2009 | 31 | மண்டூர் | வீடு | வெளிநபர் | வீட்டில் தங்கியிருந்த ஆசிரியர் தன்னை காதலித்து ஏமாற்றியதாக முறைப்பாடு செய்யும் பெண், தான் ஆசிரியரால் கர்ப்பிணியாக்கப் பட்டுள்ளதால் பிறக்கும் குழந்தைக்கு பிறப்புப் பதிவு வைக்க உதவுமாறு கோருகிறார். |
| 22.05.2009 | 26 | கன்னங்குடா | வீடு | கணவர் | இப் பெண்ணின் கணவன் வேறு திருமணம் முடித்துச் சென்று விட்டார். இதனால் இரண்டு பிள்ளைகளுடன் மிகவும் சிரமப்படும் பெண், கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற உதவி புரியும்படி கோருகிறார். |
| 01.06.2010 | 31 | முதலைக்குடா | வீடு | கணவர் | இப் பெண்ணின் கணவன் பெண்ணைப் பிரிந்து சென்றுவிட்டார். 5 வருடமாகத் தன்னைப் பிரிந்து சென்று விட்ட கணவன் வேறு திருமணம் முடித்துவிட்டார் எனவும் ஆனால் கணவனது விலாசம் தனக்குத் தெரியாது எனவும் முறைப்பாடு செய்யும் பெண், 3 பிள்ளைகளுடன் மிகவும் துன்பப்படும் தனக்கு கணவன் இருப்பிடத்தைக் கண்டறிய உதவி கோருகிறார். |
| 01.06.2010 | 34 | நற்பிட்டிமுனை | வீடு | கணவர் | இப் பெண்ணின் கணவன் குடும்பத்தையோ நான்கு பிள்ளைகளையுமோ கவனியாமல் இருப்பதுடன் குடித்துவிட்டு பெண்ணிற்கு அடித்து வருகிறார். தற்போது குடியிருக்கும் காணியை விற்றுத்தரும்படி அடித்து வருவ தாகவும் கணவன் அடித்ததில் தனது கண் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், இது விடயமாக பொலிசாரிடம் தான் முறையிட்டபோதும் பொலிசார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என குறிப்பிடுகிறார். ஆகவே கணவன் மீது பொலிசார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை செய்து தரும்படி கோருகிறார். |
| 02.06.2010 | 25 | மாமாங்கம் | வீடு | கணவர் | கணவன் இப் பெண்ணை தினமும் அடித்துச் சித்திரவதைப்படுத்துகிறார். பெண் கர்ப்பிணியாக இருந்த போது கணவன் இவரை அடித்துக் கிணற்றுக்குள் தள்ளியுள்ளார். தற்போது குழந்தை பிறந்து 23 நாள் ஆன நிலையில் மீண்டும் கணவன் அடித்து சித்திரவதைப் படுத்துவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனுடன் சேர்ந்துவாழ முடியாதுள்ளதால் தான் வேலைக்குச் சென்று வாழ்வதாகவும் ஆகவே விவாகரத்துப் பெற்றுக் கொள்ள உதவும்படியும் கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 03.06.2010 | 27 | சந்திவெளி | வீடு | கணவர் | வெளிநாட்டில் இருந்து வந்த கணவன், பிள்ளை பிறந்து 23வது நாளில் பிள்ளையையும் தன்னையும் கைவிட்டு தாயின் வீட்டிற்குச் சென்று விட்டார் என முறைப்பாடு செய்யும் பெண், செலவுக்குப் பணமின்றி பிள்ளையை பராமரிக்க முடியாமல் துன்பப்படுவதால் தற்போது மீண்டும் ௌிநாட்டிற்குச் செல்ல ஆயத்தமாகும் கணவன் வெளிநாடு செல்லு முன் வழக்குப் பதிவு செய்ய உதவுமாறு கோருகின்றார். |
| 03.06.2010 | | மண்டூர் | வீடு | கணவர் | எட்டு மாதக் கர்ப்பிணியாய் உள்ள இப் பெண்ணை குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் கைவிட்டுச் சென்றுள்ளார். பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுக் கொள்ள உதவி கோருகிறார். |
| 03.06.2010 | 34 | சின்ன உப்போடை | வீடு | கணவர் | பெண் சிறு கடை வைத்து வியாபாரம் செய்து மூன்று பிள்ளைகளை படிப்பித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் கடந்த 5 வருடங்களாக குடும்பத்தைக் கவனியாமல் குடித்து பிரச்சினைப்படுத்தி காசு கேட்டு தொல்லைபடுத்தவதாக முறைப்பாடு செய்யும் பெண், தினமும் நடக்கும் சண்டைகளால் தங்களால் படிக்கமுடியாது எனப் பிள்ளைகள் கூறுவதால் கணவனிடமிருந்து தனக்கு விவாகரத்தும் பிள்ளைகளுக்கு தாவரிப்பும் பெற்றுக் கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |
| 04.06.2010 | 32 | இருதயபுரம் மேற்கு | வீடு | கணவர் | குடிப்பழக்கத்திற்குள்ளாகியுள்ள கணவன் தினமும் தன்னை அடித்துச் சித்திரைவதைப் படுத்துவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தனக்கும் இரு பிள்ளைகளுக்கும் தாவரிப்புப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 05.06.2010 | 29 | செங்கலடி | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் திருமணம் முடித்து 8 வருடங்களில் கடந்த இரு வருடங்களாக பெண்ணுடன் தொடர்புகள் எதுவுமின்றி எனினும் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்றார். தனது கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், ,கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 09.06.2010 | | பிறைந்துறைச் சேனை | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவன், "லாபத்தில் பங்கு தருவேன்" எனக் கூறி தனது சகோதரியின் பணத்தைப் பெற்றுத் தொழில் செய்து வந்ததாகவும் எனினும் லாபத்தில் பங்கோ அல்லது வாங்கிய பணத்தையோ திருப்பிக் கொடுக்காமல் மூன்று மாதக் கர்ப்பிணியான தன்னை சித்திரவதைக்குள்ளாக்கி கைவிட்டுச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், இது விடயமாக தான் காதிக் கோட்டிற்குச் சென்றுள்ளதாகவும் எனினும் அங்கு தனக்கு நீதி கிடைக்காவிட்டால் ஏமாற்றப்பட்டிருக்கும் தன் சகோதரி கணவனிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளவும், பிறக்கப் போகும் தன் குழந்தையின் எதிர்காலத்திற்காய் தான் கணவனுடன் சேர்ந்து வாழவும் உதவி புரியும்படி கோருகிறார். |
| 10.06.2010 | 24 | எருவில் | வீடு | கணவர் | கணவர் பெண்ணையும் பிள்ளையையும் கை விட்டுச் சென்றுவிட்டார். பெண் கணவருக்கெதிராக வழக்குப் போட உதவிபுரியும்படி கோருகிறார். |
| 17.06.2010 | 31 | ஆரையம்பதி | வீடு | கணவர் | பெண் சுனாமியில் தாயையும் உறவுகளையும் சொத்துக்களையும் இழந்துள்ளார். குற்றம் சாட்டப்பட்ட நபர் கௌரவத்திற்காக சீதனம் தந்தால் போதும் எனக் கூறி அதிக பணத்தைச் சீதனமாகப் பெற்று பெண்ணை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். திருமணத்திற்கு கிடைத்த அன்பளிப்புக்கள் உட்பட வீட்டு உறுதிகள் அனைத்தையும் கைப்பற்றிய தனது கணவன் தன்னை அடித்து மிகவும் கொடுமைப் படுத்துவதுடன் நடத்தை கெட்டவள் எனக் கூறி அவமானப்படுத்தி இன்னும் அதிக பணம் பெற்று வரும்படி வீட்டைவிட்டு துரத்தி விட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து விவாகரத்து, பெண்ணின் தாயுறுதி உட்பட உறுதிப்பத்திரங்கள், அன்பளிப்புக்கள், சீதனமாக வழங்கிய பணம் , மானபங்கப்படுத்தியதற்கான நட்டஈடு ஆகியவற்றை தான் பெற்றுக்கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |
| 17.06.2010 | 22 | வாழைச்சேனை | வீடு | வெளிநபர் | பெண்ணின் தாய் வெளிநாட்டிற்கு பணிப் பெண்ணாய்ச் சென்றுள்ளார். வீட்டில் திருமணமான தங்கையுடனும் தம்பியுடனும் பெண் வசித்து வந்துள்ளார். தங்கையின் கணவர் வெளிநாட்டில் பணிபுரிகிறார். தம்பியின் நண்பன் பெண்ணின் வீட்டிற்கு வந்து போன நிலையில் பெண்ணின் தங்கை தம்பியின் நண்பனுடன் உறவு கொண்டு கர்ப்பிணியாயுள்ளார். இதனால் தங்கை நண்பனுடன் வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார். தற்போது அக்காவான இப் பெண்ணும் கர்ப்பிணியாய் உள்ளார். தம்பியின் நண்பர்தான் தன் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் தந்தை என முறைப்பாடு செய்யும் பெண், பிள்ளை பிறந்ததும் பிறப்பு பதிவு வைக்க உதவிபுரியும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 18.06.2010 | 23 | ஆரையம்பதி | வீடு | கணவர் | பெண்ணின் கணவர் பெண்ணைக் கைவிட்டுச் சென்றுள்ளார். நீதிமன்றில் பெண்ணுக்கும் இரு பிள்ளைகளுக்கும் தாவரிப்புக் கட்டும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் ஒழுங்காகப் பணம் கட்டாத காரணத்தால் குடும்பபராமரிப்பிற்காக பெண் தொழில் செய்து வந்துள்ளார். தொழிலுக்குச் சென்ற போது தன் பிள்ளைகளை கணவனின் தந்தை கூட்டிச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளவும் விவாகரத்துப் பெறவும் உதவிபுரியும்படி கோருகிறார் |
| 18.06.2010 | 23 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | தன்னுடன் சண்டைபிடித்துவிட்டு கணவர் பிரிந்து சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், பொலிசில் முறைப்பாடு செய்த போது கணவர் சேர்ந்து வாழ முடியாது எனக் கூறிவிட்டதால் கணவனுடன் தன்னைச் சேர்த்துவைக்கும்படியும் கணவர் மறுத்தால் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுக் கொள்ள உதவிபுரியும் படியும் கோருகிறார். |
| 19.06.2010 | 18 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | இப் பெண்ணை பலாத்காரமாகத் திருமணம் முடித்துள்ள குற்றம் சாட்டப்பட்டுள்ள இந் நபர் ஏற்கனவே திருமணம் முடித்துள்ளார். தற்போது பெண்ணிடமிருந்து பெண்ணின் 6 மாதக் குழந்தையைப் பறித்தவிட்டு பெண்ணைத் தன் உறவினர் ஒருவரின் வீட்டில் வைத்துக் கொடுமைப்படுத்தி வருகிறார். பெண்ணுடைய உறவினர்கள் பெண்ணைச் சந்தித்தால் கொலை செய்வதாக அச்சுறுத்தம் இவரிடமிருந்து பெண்ணைக் காப்பாற்றும்படியும் குழந்தையைப் பெற்று தாயிடம் கொடுக்கும் படியும் பெண்ணின் உறவினர்கள் கோருகின்றனர். |
| 22.06.2010 | 23 | செங்கலடி | வீடு | கணவர் | பெண்ணுக்கு வீடு கட்டி முடிக்கப்பட்டதும் திருமணம் செய்வது எனும் ஒப்பந்தத்தில் பெண்ணுக்கு திருமணப்பதிவு நடந்துள்ளது. ஆனால் தான் யாருடன் கதைத்தாலும் குற்றம் சாட்டப்பட்ட கணவர் தன்மீது சந்தேகங் கொள்வதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து விவாகரத்துக் கோருகின்றார். |
| 24.06.2010 | 27 | இருதயபுரம் | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவர் பெண்ணைப் பிரிந்து தாயின் வீட்டிற்குச் சென்றுள்ளார். பெண் அழைத்தபோது பெண்ணினது வீட்டை விற்கும் படி கூறியுள்ளார். ஆகவே பெண் கணவனை அழைத்துக் கதைக்கும்படி கோருகிறார். |
| 25.06.2010 | 48 | களுவாஞ்சிக்குடி | வீடு | கணவர் | பெண்ணினது கணவர் பெண்ணைப் பிரிந்து சென்று விட்டார். இதனால் மூன்று பிள்ளைகளுடன் மிகவும் சிரமத்திற்குள்ளாகும் பெண் கணவனிடமிருந்து தாவரிப்புக் கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 25.06.2010 | 21 | வாழைச்சேனை | வீடு | அண்ணன் | பெண்ணினது வீட்டாருக்கு விருப்பம் இல்லாத நிலையில் பெண் தையல் பயிற்சி வகுப்பிற்குச் சென்றுள்ளார். இதனால் தன்னை அண்ணன் அடித்து தையல் வகுப்பிற்குச் செல்ல தடை விதித்துள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், தான் மீண்டும் வகுப்பிற்குச் செல்ல உதவி புரியும்படி கோருகிறார். |
| 29.06.2010 | 21 | ஆரையம்பதி | வீடு | கணவர் | கடையில் கணவனுடன் சேர்ந்து பணியாற்றிய பெண்ணை கணவன் திருமணம் செய்து விட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனுடன் தன்னைச் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 29.06.2010 | 20 | காத்தான்குடி | வீடு | கணவர் | கணவன் தினமும் தன்னை அடித்துக் காயப்படுத்து வதாகவும் வேலைக்குச் செல்லும் போது தன்னை வீட்டிற்குள் வைத்து பூட்டி விட்டுச் செல்வதாகவும் இரவு 10 மணிக்குப் பின்னரே வேலை முடிந்து வந்து திறந்து விடுவதாகவும் பெண் முறைப்பாடு செய்கின்றார். காயத் துடன் வீட்டிற்குள் வைத்து பூட்டப்பட்ட 8 மாதக் கர்ப்பிணி யான தன்னை அயலவர்கள் கதவை உடைத்து திறந்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக குறிப்பிடும் இவர், தனக்கு கணவனிடமிருந்து பாதுகாப்பு வேண்டும் எனக் கோருகின்றார். |
| 30.06.2010 | | செங்கலடி | வீடு | கணவர் | கூட்டுத்தாபனம் ஒன்றில் வேலை செய்யும் கணவர் அங்கு அவருடன் வேலை செய்யும் பெண்ணை திருமணம் முடித்துச் சென்று விட்டதாகவும் செல்லும்போது தனது நகைகளையும் எடுத்தச் சென்று விட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், இரண்டு பிள்ளைகளுடன் சிரமப்படும் தன்னுடன் கணவனைச் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | முறைப்பாடு செய்தவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 18.02.2009 | 31 | மட்டக்களப்பு | வீடு | காதலன் | குற்றம் சாட்டப்பட்டுள்ள காதலன் தன் மகளை அடித்துத் துன்புறுத்துவதுடன் தொலைபேசி யினூடாக மகளைப் பற்றி அவதூறாகக் கதைப்பதாகவும் மகளுடன் காதலன் உடலுறவு கொண்டதாகவும் முறைப்பாடு செய்யும் தந்தை ஆகவே மனவேதனை அடைந்துள்ள மகளுடன் கதைக்கும்படி தந்தை கோருகிறார். |
| 26.02.2009 | 22 | புன்னச்சோலை | வீடு | கணவன் | பெண்ணினது வீடு தந்தையின் பெயரில் உள்ளது. திருமணத்தின் போது வீட்டைத் தருவதாகச் சொன்ன மனைவியின் வீட்டார் வீடு தராமல் தங்களுடனேயே வசிப்பதாகவும் ஆகவே தான் பிரிந்து வாழ்வதாகவும் குறிப்பிடும் கணவன் மனைவியை தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகின்றார். திருமணம் செய்த நாளில் இருந்து தன்னுடன் தொடர்புகள் அற்ற நிலையில் வாழ்ந்த கணவனைத் தான் பிரிய விரும்புவதாக பெண் முறைப்பாடு செய்கின்றார். |
| 23.03.2009 | 41 | முனைக்காடு | வீடு | | தனது மனைவியை தான் அடித்ததாகவும் ஆகவே மனைவியைக் காணவில்லை எனவும் முறைப்பாடு செய்யும் கணவர், ஏற்கனவே மனைவியை அடித்ததற்கான வழக்கு ஒன்று தனக்குள்ளதால் மனைவியைத் தேடித் தரும்படி கோருகிறார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | முறைப்பாடு செய்தவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 24.04.2009 | 26 | சின்ன உப்போடை | வீடு | கணவர் | கணவன் மனைவியுடன் சண்டை பிடித்து மனைவியை அடித்துள்ளார். இதனால் பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். பின் பொலிசாரின் விசாரணையை அடுத்து பெண் சொந்த விருப்பத்தில் கணவனைப் பிரிந்து தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டார். " பெண்ணைத் தொந்தரவு செய்யக் கூடாது " என பொலிசாரால் கணவன் எச்சரிக்கப்பட்டுள்ளார். எனினும் தனது மனைவி தன்னிடம் வந்தால் தான் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புவதாக கணவர் கோருகிறார். |
| 27.03.2009 | 36 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | வெளிநாட்டில் இருந்து வந்த மனைவியின் மாமா மூன்று நாள் வீட்டில் தங்குவதாகச் சொல்லித் தங்கியதாகவும் தற்போது ஒருமாதம் ஆகியும் மாமா செல்லாமல் உள்ளார் எனவும் முறைப்பாடு செய்யும் பெண்ணின் கணவன் மனைவியிடம் இது பற்றிக் கதைத்தபோது மாமா இங்குதான் இருப்பார் என மனைவி சொல்லி விட்டதால் தான் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாக குறிப்பிடுவதுடன் மனையிடம் கதைத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கோருகிறார். |
| 24.04.2009 | 44 | மஞ்சந் தொடுவாய் | வீடு | வெளிநபர் | தனது மனைவியின் சகோதரி அவரது பிள்ளையுடன் 13 வருடங்களாக தங்களுடன் வசித்து வந்ததாகவும் தனக்குத் தெரிந்த அரச கடமைபுரியும் ஒரு நபர், வீடும் ஏனைய வசதிகளும் தருவதாகக் கூறி தன் மனைவியின் சகோதரியை அழைத்துச் சென்று விட்டதாகவும் தற்போது பெண்ணைக் காணவில்லை எனவும் முறைப்பாடு செய்யும் பெண்ணின் சகோதரியின் கணவர், பெண்ணைத் தேடித் தரும்படி கோருகின்றார். |
| 19.05.2009 | 26 | பூநொச்சிமுனை | வீடு | கணவர் | பெண்ணின் கணவன் "மனைவி சண்டை பிடித்து பிரிந்து விட்டாள் சேர்த்து வையுங்கள்" என முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளில் மனைவி கூறுகையில், தன் கணவன் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்து வீட்டிற்கு வராமல் இருப்பார். பின் அவரே பொலிசில் சென்று "மனைவி பிரிந்து விட்டார் சேர்த்து வையுங்கள்" என முறைப்பாடு செய்வார். பொலிசாரும் சேர்த்து வைப்பார்கள். ஆனால் மீண்டும் சண்டை பிடித்துச் சென்று விடுவார் எனக் குறிப்பிட்டார். |


**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

**இல. 20, டயஸ்லேன்,**

**மட்டக்களப்பு.**

**தொ.பேசி : 065-2223297**


முகவரி. ..............................................

..............................................

..............................................

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org